விட்டதால் ஆரம்பித்து குளிர்பான கடைகளில் வியாபாரம்

தாக இல்லை.
சென்னையில் கோடை வெயிலின் தாக்கத்தை

விடுத்துள்ளனர். இந்த விஷயத்தில் தமிழக அர நடவடிக்கை எடுக்குமா

### பொன்னேரி

# வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரி ஆண்டு விழா




**பொன்னேரி, மார்ச் 12-**
திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அடுத்த பஞ்செட்டியில் உள்ள வேலம்மாள் தொழில்நுட்ப கல்லூரி ஆண்டு விழா கல்வி குழும நிறுவனர் எம்.வி.முத்துராமலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. வேலம்மாள் கல்வி அறக்கட்டளை இயக்குநர் எம்விஎம்.சசிகுமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் சந்திரசேகர் வரவேற்றார்.

இதில் ஸ்ஓஹோ கார்ப்பொரேஷன் இந்தியா இயக்குனர் ராஜேந்திரன், காக்னிசன்ட் புராடக்ட் அண்ட் ரிசோர்சஸ் டெக்னாலஜி சொல்யுசன்ஸ் இயக்குனர் விஜய் ஏகாம்பரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

'இத்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தங்களின் திறமையை வளர்த்துக்கொண்டு,நுட்பமான அறிவோடு, கடினமான சூழ்நிலைகளை கையாண்டு, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துக்கேற்ப புதிய கண்டுபிடிப்பு மற்றும் சாதனைகளையும் வழங்கி, சமுதாயத்தை நன்முறையில் செதுக்கும் சிற்பிகளாக திகழவேண்டும்' என சிறப்பு விருந்தினர்கள் வலியுறுத்தினர்.

விழாவில் அண்ணா பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ-மாணவிகளுக்கும், சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பேராசிரியர் கே.ரசாக், எம்.வாசு மற்றும் அனைத்து துறை தலைவர்களும் கலந்து கொண்டனர். துணை முதல்வர் முனைவர் எஸ். சவுந்தரராஜன் நன்றி கூறினார்.

